175382

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய (திருத்த)ச் சட்டம்

---

[1982, சனவரி மாதம் 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1982, சனவரி மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 45 தபாற் செலவு: சதம் 50

1982 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய (திருத்த)ச் சட்டம்

[1982, சனவரி மாதம் 20 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ. $\frac{14/81}{1440}$

## 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய (திருத்த)ச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்கச் சட்டத்தில் 11அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

2. இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடப்படும், 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தின் 11 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 11 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" அமைச்சரின் பணிப்புரைகள்.

11அ. அமைச்சரானவர், இச்சட்டத்தின்கீழான சபையின் கடமைகளைப் புரிதல் பற்றியும் தத்துவங்களைப் பிரயோகித்தல் பற்றியும் எழுத்திலான, பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளைச் சபைக்குக் காலத்துக்குக்காலம் வழங்கலாமென்பதுடன், சபையானது, அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன் கொடுத்தலும் வேண்டும். ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை நீக்குதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"1958 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கச் சட்டம் ஏற்புடையதாகின்ற குறித்தசில தொழில்தருநர்களினால் செலுத்தப்படும் உதவுதொகை.

17. (1) இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டம் ஏற்புடையதாகின்ற தொழில் தருநர் ஒருவர், அச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ், அச்சட்டத்தின்கீழ்த் தாபிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியத்திற்கு அல்லது அச்சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியமொன்றென வெளிப்படுத்தப்பட்ட சகாய நிதியமொன்றுக்கு, அத்தகைய தொழில்தருநரால் வேலைக்கமர்த்தப்பட்ட ஒவ்வோர் ஊழியர் தொடர்பிலும், அச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்

கப்பட்ட தொகையிலும் பார்க்கக்கூடிய நூற்று வீதமொன்றின்படி கணக்கிடப்பட்ட தொகை யொன்ருன உதவுதொகையைச் செலுத்துவதற் குத் தெரிவொன்றினைச் செய்திருக்குமிடத்தும் அத்துடன்,—

(அ) அத்தகைய கூடிய நூற்றுவீதமானது அத்தகைய தொழில்தருநரின் கீழான அத்தகைய ஊழியரின் ஊழியத்திலி ருந்து கிடைக்கப்பெறும் மாதமொன் றுக்கான அவரது மொத்த உழைப்பு களின் மூன்று சதவீதமாக அல்லது அதற்குக் கூடியதானதாயிருப்பின் அத் தகைய தொழில்தருநர் ஒவ்வொரு மாதமும் அத்தகைய கூடிய நூற்று வீதத்திலிருந்து மூன்று சத வீதத் தைக் கழிக்கலாமென்பதுடன், அத்த கைய மூன்று சதவீதத்தை இச் சட் டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியத் துக்கு அனுப்பியும் வைக்கலாம் ; அத் துடன் அத்தகைய கழிப்பின் பின்னர் எஞ்சியுள்ளதை ஊழியர் சகாய நிதி யத்துக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்திற்கு உதவு தொகை யாகத் தொடர்ந்து செலுத்திவரலாம் ; அல்லது

(ஆ) அத்தகைய கூடிய நூற்றுவீதமானது, அத்தகைய தொழில்தருநரின் கீழான அத்தகைய ஊழியரின் ஊழியத்திலி ருந்து கிடைக்கப்பெறும் மாதமொன் றுக்கான அவரது மொத்த உழைப்பு களின் மூன்று சதவீதத்திற்குக் குறை வானதாயிருப்பின், அத்தகைய தொழில் தருநர், அக்கூடிய நூற்றுவீதத்தை விஞ்சுகின்றதான அச்சட்டத்தின் 10ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்த கைய தொகையை, அத்தகைய உழைப் புகளின் மூன்று சதவீதமான கூட்டுத் தொகையொன்ருக ஆக்குமாறு, அத் தகைய தொழில்தருநரினுல் செய்யப் பட்ட ஒரு மேலதிக உதவுதொகை யுடன் சேர்த்து இச்சட்டத்தின்கீழ் தாபிக் கப்பட்ட நிதியத்திற்கு அனுப்பி வைக்கலாம் என்பதுடன், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின்கீழ் குறித் துரைக்கப்பட்ட தொகையை அத்தகைய தொழில்தருநர் ஊழியர் சகாய நிதி

யத்திற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்திற்கு உதவுதொகையாகத் தொடர்ந்து செலுத்தியும் வரலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி, இச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிதியத்திற்கு, தொழில்தருநர் ஒருவரினால் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவானது, 16 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கச் செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"நன்மைகள் எப்போது கொடுக்கப்படும் என்பது.

21. (1) நிதியத்தின் எவரேனும் உறுப்பினரின் தனிப்பட்ட கணக்கில் வரவிலிருக்கும் பணங்கள் எவையும் நிதியம் தாபிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதியொன்று முடிவுறும்வரை செலுத்தப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள இரண்டாண்டுகளைக்கொண்ட காலப்பகுதி முடிவடைந்ததன்மேல், உறுப்பினரொருவருக்கு, 23 ஆம், 24 ஆம், 25 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக அவரது தனிப்பட்ட கணக்கில் வரவிலிருக்கும் மொத்தத்தொகை செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவினதும் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இந்திய — இலங்கை உடன்படிக்கை (செயற்படுத்தல்) சட்டத்தின் கீழ் தாயகத்திற்குத் திருப்பி அனுப்பப்படவுள்ள எவரேனும் உறுப்பினரின் தனிப்பட்ட கணக்கில் வரவிலிருக்கும் பணங்களின் மொத்தத் தொகையானது, அவர் இலங்கையிலிருந்து புறப்படும் தேதிக்கு முன்னராக அத்தகைய உறுப்பினருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (அ), (ஆ), (இ), (ஈ) என்னும் பந்திகளை விட்டுவிடுவதன்மூலமும் அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(அ) அத்தகைய உதவுதொகையானது, பத்து நாட்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாக இருக்குமிடத்து, அத்தகைய உதவுதொகைத் தொகையின், ஐந்து சதவீதம் ;

(ஆ) அத்தகைய உதவுதொகையானது, பத்து நாட்களுக்கு மேற்படுகின்ற, ஆனால் ஒரு மாதத்துக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாக இருக்குமிடத்து, அத்தகைய உதவுதொகைத் தொகையின் பதினைந்து சதவீதம் ;

(இ) அத்தகைய உதவுதொகையானது, ஒரு மாதத்துக்கு மேற்படுகின்ற, ஆனால் மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு நிலுவையாக இருக்குமிடத்து, அத்தகைய உதவுதொகைத் தொகையின் இருபது சதவீதம் ;

(ஈ) அத்தகைய உதவுதொகையானது, மூன்று மாதங்களுக்கு மேற்படுகின்ற, ஆனால் ஆறு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு நிலுவையாக இருக்குமிடத்து, அத்தகைய உதவுதொகைத் தொகையின் முப்பது சதவீதம் ;

(உ) அத்தகைய உதவுதொகையானது, ஆறு மாதங்களுக்கு மேற்படுகின்ற, ஆனால் பன்னிரு மாதங்களுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கு நிலுவையாக இருக்குமிடத்து, அத்தகைய உதவுதொகைத் தொகையின் நாற்பது சதவீதம் ; அத்துடன்

(ஊ) அத்தகைய உதவுதொகையானது, பன்னிரு மாதங்களுக்கு மேற்படுகின்றவொரு காலப்பகுதிக்கு நிலுவையாக இருக்குமிடத்து, அத்தகைய உதவுதொகைத் தொகையின் ஐம்பது சதவீதம்.".

4 ஆம் பிரிவு கடந்த காலத்தையும் உள்ளடக்கிப் பயனுறுதல்.

7. இச்சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தமானது, எல்லா நோக்கங்களுக்காகவும் 1981 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150, (வெளிநாடு) ரூபா 200, ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.